எம்.சி.ஓ.பி எண்: 873/2022 தேதி: 25.03.2025

மசா. : 1

பெயர் : யமுனா

க /பெ. : லோகநாதன்

வயது : 31

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி. என் கணவர் இறந்துவிட்டார். என் கணவருடைய தம்பி பாலாஜிக்கு சொந்தமான இருசக்கரவாகனத்தை என் கணவர் ஓட்டிச்சென்றதாக சொன்னார்கள். நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியவாறு விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. லாரியின் பின்னால் இருசக்கரவாகனம் இடித்ததாக சத்திய பிரமாணவாக்குமூலத்தில் காணப்படுகிறது என்றால் சரி. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் அஜாக்கிருதையும், கவனக்குறைவும் விபத்திற்கு காரணம் இல்லை என்றால் சரியல்ல. என் கணவர் கடை வைத்து வாகனங்களுக்கான சீட் கவர், பேட்ரி விற்றார். கடை வைத்திருந்ததற்கான அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள மசாஆ 12 ஆவணம் ஏப்ரல் 1 2020 முதல் மார்ச் 31 2021க்கான வருமானத்தை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. விபத்து ஜனவரி 8 2022 அன்று நடந்தது. விபத்து தேதியில் இருந்து 10 மாதத்திற்கான ஆவணம் ஏப்ரல் 1 2021 முதல் 8 .01.2022 க்கான வருமானத்திற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அந்த 10 மாதங்களில் எந்த வருமானமும் வராத காரணத்தாலும் தொழில் செய்யதா காரணத்தாலும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கூறும் விதமாக என் கணவருக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகைக்கு ஆதாரம் தாக்கல் செய்யாத காரணத்தால் அது கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. . விபத்து என்னுடைய கணவரின் அஜாக்கிருதையால் மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.